**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.253/2025 பெயர் : என்.ஆனந்தகுமார் நாள் : 23.07.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

பி.வா.சா.1 : 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

இறந்துபோன என் தந்தை கே.கே.நாச்சிமுத்து, ஈரோடு, கருங்கல்பாளையம் ஆறுமுகப்பிள்ளைவீதியில் வீடு வாங்கிய கிரைய பத்திரம் மற்றும் அவர் நாமக்கல் புதுசத்திரம் என்ற இடத்தில் வாங்கிய காலிஇடத்தின் கிரயபத்திரத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிவாசஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மேல்தளம் கலாராணிக்கும், கீழ்தளம் ஆனந்தகுமாருக்கும் ஒதுக்கப்பட்டது. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அதிக அளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாதி பங்கு வாதி பிரசன்னவெங்கடேஷ்க்கு உரிமை என்றால் சரியல்ல. கே.கே.நாச்சிமுத்துவின் வாரிசுகளான 1முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாதி பாகம் பாத்தியம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பிவாசாஆ.1 பத்திரத்தில் பாகம் நேர்மையாக பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு 1/8ல் பங்கு பாகம் பெற உரிமை உள்ளது என்றால் அது தவறு.

**குறுக்கு விசாரணை இல்லை**